DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, FAST TRACK COURT, AMBATTUR
TIRUVALLUR DISTRICT

**STC.No.2/2025**
Deposition of Witness for – Prosecution : PW1
Defence:

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : மெர்லி தேவதாஸ் | | : |
| த/பெ | : ஜான்சன் செல்வகுமார் | மதம் | : |
| கிராமம் | : ரெட்ஹில்ஸ் | தொழில் | : மளிகைக்கடை |
| வட்டம் | : சென்னை | வயது | : 37/2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of Date

---

**தேதி – 05.08.2026**

**<u>குறுக்கு விசாரணை தொடர்ச்சி:</u> PW1**

நான் மளிகை கடை வைத்து வியாபாரம் செய்து வரும் விவரத்தை புகார் மனுவில் கூறியுள்ளேனா என்றால் இல்லை. எதிரி எந்த தேவைக்காக பணம் வாங்கினார் என்றால் குடும்ப தேவை என்று தான் கூறினார். எதிரி மாதம் ரூ.6,000/– வட்டி செலுத்தி வந்தார். எங்களிடையே மூன்று மாதம் வட்டி செலுத்துவதாகவும், மூன்று மாதம் முடிந்து அசல் தொகையை திருப்பி செலுத்துவதாக பேசியிருந்தோம். புகார் மனுவில் 3 மாதம் எதிரி வட்டி கொடுத்த விவரத்தை தெரிவித்துள்ளேனா என்றால் இல்லை. 1950 த்திற்கு முன்பினிருந்தே மளிகை கடை நடத்தி வருகிறேன். எதிரி வீட்டிற்கு செல்லும் வழக்கம் உள்ளதா என்றால் உள்ளது. எதிரி எங்கள் கடையில் மளிகை பொருட்கள் வாங்கியுள்ளரா என்றால கடைக்கு வரமாட்டார். எண்.130, GMT Road, Redhills முகவரியில் DJ மளிகை கடை நடத்தி வருகிறேன். நான் 2005 லிருந்து என் குடும்பம் நடத்தி வந்த மளிகை கடையை எடுத்து நடத்துகிறேன். மாத வருமானம் ரூ.1,00,000/– லிருந்து ரூ.1,50,000/– கடையில் இருந்து வரும். கடையில் வரும் லாபத்தில் வங்கி கணக்கில் காண்பித்துள்ளேனா என்றால் நானும் என்

அண்ணனும் சேர்ந்து தான் நடத்தி வருகிறோம் கடை பெயரில் உள்ள வங்கி கணக்கில் மாதம் இலாபம் காட்டி வருகிறோம். எங்கள் கடைக்கு வங்கி கணக்கு உள்ள விவரத்தை புகார் மனுவில் தெரிவிக்கவில்லை. எதிரிக்கு கொடுத்த கடன் தொகையின் Denomiation ஞாபகமில்லை. எதிரியிடம் பணம் கொடுத்தற்கு கடன் உறுதி சீட்டு வாங்கினேன், அதில் சாட்சி கையெழுத்து உள்ளது. கடன் உறுதி சீட்டை யார் நிரப்பினார் என்றால் எங்கள் பொது நண்பரான் சாந்தகுமார் எழுதினார் அவர் சாட்சியாக இருந்து கையெழுத்தும் செய்துள்ளார். காசோலையில் எனது பெயரை யார் நிரப்பினார் என்றால் எதிரி தான் நிரப்பினார். எதிரிக்கு நான் பணம் தரவில்லை என்றும், கடன் உறுதி சீட்டை தவறாக பயன்படுத்தியுள்ளேன் என்றும், காசோலையும் எதிரி தரவில்லை நானே நிரப்பி பொய்வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

MAHASAKTHI K

Digitally signed by MAHASAKTHI K